


# நிலைமாற்றுக்கான நீதி தொடர்பான பின்புலம்

இலங்கையில் 2008 ஆம் ஆண்டு புரட்டாதி மாதமளவில் வட பகுதியில் யுத்தம் வலுப்பெறத் தொடங்கியது. இதனால் தை மாதம் தொடக்கம் மன்னார் வவுனியா போன்ற பகுதிகளில் தடுப்பு முகாம்கள் உருவாகத் தொடங்கின. அதாவது விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்த மக்கள் சுய விருப்பின் பேரில் புலிகளது கடுமையான கட்டுப்பாடுகளையும் மீறி அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இடம்பெயரத் தொடங்கினர். குறிப்பாக 2009 ஆம் ஆண்டு பங்குனி சித்திரை மாதங்களில் உக்கிரமடைந்த யுத்தம் காரணமாக பாரிய உயிர்ச் சேதத்தோடு இரண்டு இலட்சத்து எண்பதினாயிரம் பேர் வரையிலான இடம்பெயர்ந்த மக்களைத் தடுத்து வைப்பதற்காக மெனிக் பாம் வவுனியாவில் உருவாக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் 23.05.2009 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்து மெனிக் பாமினைப் பார்வையிட்டார். இதன் பிற்பாடு செயலாளர் நாயகம் அவர்கள் மூன்று உறுப்பினர்கள் கொண்ட நிபுணத்துவம் கொண்ட குழுவை இலங்கையின் பொறுப்புக் கூறுதல் சம்பந்தமாக நியமித்தார். அவ்வறிக்கை 2011 பங்குனி மாதம் வெளியாகியது. அதிலே இறுதிக்கட்டப் போரில் போர்க் குற்றமும் மனித குலத்திற்கு எதிரான குற்றமும் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. இவ்வறிக்கைக்குப் பதிலீடாக அப்போதைய இலங்கை அரசாங்கம் 2012இல் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான அறிக்கையைச் சமர்ப்பித்தது.

Supported by
**UNITED NATIONS OFFICE OF THE HIGH COMMISSIONER FOR HUMAN RIGHTS**

Implimenting by
**கிழக்கு சமூக அபிவிருத்தி மையம் (ESDF)**

ESDF - SRI LANKA

*2012 - 2014 ஆகிய காலப்பகுதியில் இலங்கை அரசிற்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 2013 ஆம் ஆண்டு ஆவணி மாதம் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை அவர்கள் இலங்கை வந்து அவதானித்த விடயங்களைக் கொண்டு, 2014 பங்குனி மாதத்தில் இடம்பெற்ற தீர்மானத்தின் பிரகாரம் இலங்கையில் யுத்தக் குற்றம் இடம்பெற்றதாகவும், அதனை ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையே விசாரணையை நடாத்த வேண்டும் எனவும் முன்மொழிந்தார். அத்தோடு இவர் விசேட பொறிமுறையான ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் விசாரணைக் குழு முறைமையையும் (OISL) பரிந்துரைத்தார். இப்பொறிமுறையானது மாசி 2002 தொடக்கம் கார்த்திகை 2011 வரையான காலத்தை உள்ளடக்கியதான காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களையும், குற்றச் செயல்களையும் விசாரிப்பதாகும். இவ்விசாரணையானது, குற்றம் சுமத்தப்பட்ட மீறல்கள் மற்றும் குற்றச் செயல்கள் பற்றிய உண்மைகளையும் அவற்றின் சூழ்நிலைகளையும் நிலை நிறுத்தும்படி வேண்டப்பட்டது.*



*ஐ.நா மனித உரிமைச் சபையின் விசேடக் குழுவானது 04.08.2014இல் பகிரங்க அழைப்பு ஒன்றை விடுத்தது. ஏனெனில், இலங்கை அரசானது ஐ.நாவின் விசேட பிரதிநிதிகள் நாட்டிற்குள் வருகை தந்து விசாரணை செய்வதற்கு அனுமதியளிக்காத காரணத்தால், மின் அஞ்சல் வாயிலாகப் பாதிக்கப்பட்டோர் தகவல்களைச் சமர்ப்பிக்கலாம் என அறிவுறுத்தப்பட்டது. அக்குழு 2015 பங்குனி மாதம் தமது அறிக்கையை சமர்ப்பிப்பதாக இருந்தது. அவ்வறிக்கை 2015.01.08 இடம்பெற்ற இலங்கை ஜனாதிபதித் தேர்தலும், அதனூடான ஆட்சி மாற்றம் காரணமாகவும், புதிய அரசாங்கத்தின் நெகிழ்வுப் போக்குக் காரணமாகவும் வர இருந்த அறிக்கையை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் காலம் தாழ்த்தி 2015 புரட்டாதி மாதத்தில் வெளியிட்டார். அவற்றில் சில பின்வருமாறு*

- யுத்த காலத்தில் அகப்பட்டுக் கொண்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்காமை. அதாவது மருத்துவ வசதிகளின்றி உணவின்றி, பசியாலும் களைப்பாலும், அடிப்படைத் தங்குமிடம் இன்மையாலும் மக்கள் மரித்துள்ளர். யுத்தத்தால் மீண்டோருள் பலர் ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் காணப்பட்டனர்.
- யுத்த வயத்தில் எவ்வித ஆராய்வுமின்றி 70,000 பேர் வரையில் மாத்திரமே உள்ளதாகக் குறிப்பிட்டு வந்தது. ஆனால் 2009 வைகாசி மாதத்தில் யுத்த வலயங்களில் இருந்து 2,84000 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தஞ்சமடைந்தனர்.
- வலிந்து காணாமல் போதல் என்பது அதிகளவில் இடம்பெற்றிருந்தது. இதில் இராணுவம், கடற்படை, ஆயுதக் குழுக்கள் நேரடித் தொடர்பைப் பேணியிருந்தது.
- மோசமான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் ஆயுதப் படையினரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதுமட்டுமன்றி தடுப்பு முகாம்கள், மெனிக் பாம் போன்ற முகாம்களில் ஆண்-பெண் இருபாலாருக்கும் எதிராகப் பாலியல் வல்லுறவுக் குற்றங்கள் கடுமையாக இடம்பெற்றுள்ளன.
- யுத்தத்தின் இறுதியில் நிறுவப்பட்ட தடுப்பு முகாம்களில் அடிப்படை சுகாதார வசதிகள், மருத்துவ வசதிகள், குடிசை வசதிகள் போன்றவற்றில் பாரிய குறைபாடுகள் காணப்பட்டமை. சர்வதேச சட்டத்திற்குட்பட்ட காலத்திலும் பார்க்க அதிகளவான காலத்தில் மக்கள் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அங்கு சித்திரவதைகள், ஆட்கடத்தல்கள் மற்றும் பாலியல் வல்லுறவுகள் என்பன இடம்பெற்றுள்ளன.
- யுத்தத்தின் போது மக்கள் குடியிருப்புகளில் இராணுவத்தினரின் கண்மூடித்தனமான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.
- படைக்குச் சிறுவர்களினைச் சேர்த்தல் என்ற குற்றத்தை விடுதலைப்புலிகள் செய்துள்ளனர். குறிப்பாக இந்நடைமுறைகள் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் எல்லை மீறி இருந்தது. கருணா குழு மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளும் ஆட்சேர்ப்பில் ஈடுபட்டதாக இவ்வறிக்கை கூறுகின்றது.
- யுத்த காலத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் நடமாடும் மற்றும் மக்களது விசேட தேவையுடைய பகுதிகளான வைத்தியசாலைகள் போன்ற பகுதிகளில் அரண்களை அமைத்துள்ளர். இது பொது மக்கள் மீது இராணுவ நடவடிக்கை இடம்பெற வழிவகுத்துள்ளது.

- விடுதலைப்புலிகள் மக்களது வெளி நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தியமை. இக்கொள்கை 2009 தை மாதத்தில் வலுவடைந்தது. அத்துமீறி வெளிச் செல்ல முயன்றோர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- புலிகளின் கண்மூடித்தனமான தற்கொலைத் தாக்குதல்கள் மற்றும் கண்ணி வெடித் தாக்குதல்களால் பொதுமக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர். புலிகளுக்கு எதிரான கருத்துடையோர் கொல்லப்பட்டனர்.

இவ்வறிக்கை வெளிவந்த பின்னர் 2015 புரட்டாதி மாதம் அளவில் மனித உரிமைகள் சபை ஆரம்பித்த போது, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் உரையாற்றுகையில் இலங்கை தொடர்பாகவே தனது உரையை நிகழ்த்தினார். யுத்தக் குற்றம் மற்றும் பாலியல் வல்லுறவு, உணவு வழங்காது பட்டினியால் இறக்கச் செய்தல், வைத்தியசாலைகள் மீதான குண்டுத் தாக்குதல்கள் என இடம்பெற்ற குற்றங்களை ஒழுங்குபடுத்தினார். இவ்வாறான யுத்தக் குற்றத்தை ஓர் கலப்புப் பொறிமுறையினூடாக விசாரித்தல் வேண்டும் எனவும் அவர் முன்மொழிந்தார்.

அதன் பின்னர் புதிய இலங்கை அரசானது ஐ.நாவுடன் இணைந்து உள்ளூரில் இடம்பெற்ற யுத்தக் குற்றம் தொடர்பாகத் தாமும் இணைந்து விசாரிப்பதாக உறுதி பூண்டு ஐ.நா மனித உரிமைச் சபையில் இணைந்து பிரகடனத்தில் கைச்சாத்திட்டது. இதன்போது இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் இலங்கையிலே இடைக்கால நீதி தொடர்பாகப் பொறிமுறைகளை உருவாக்குவதாக உறுதியளித்ததோடு அப்பொறிமுறைகளை உண்மை, நீதி, மீள்நடக்காமைக்கான உத்தரவாதம், இழப்பீடு ஆகிய 4 விடயங்கள் சார்ந்ததான பொறிமுறைகளாக முன்மொழிந்தார். அத்துடன் சிவிற் சமூகத்தோடு இணைந்து பாதிக்கப்பட்டோருடனும் சாட்சிகளுடனும் காத்திரமாகக் கலந்துரையாடி அவர்களது முன்மொழிவுக்கூடாக இப்பொறிமுறைகளை உருவாக்குவதாக உறுதியளித்தார். இச்செயற்பாடானது பாதிக்கப்பட்டோருடன் காத்திரமாக உரையாடி அதன் ஊடாகவே உருவாக்கப்படும் எனவும் உறுதியளித்தார். இப்பொறிமுறைகளை அமைப்பதற்கு இரண்டு வருடகால அவகாசத்தையும் அவர் கோரினார்.

இவை மட்டுமன்றி வெளிவிவகார அமைச்சர், ஐக்கிய நாடுகள் விசேட பிரதிநிதிகள் நிபுணர்களுக்கும் இலங்கைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பின் பேரில் முக்கிமாக இலங்கக்கு வருகை தந்த சில நிபுணர்கள்..



1. சித்திரவதைகள், தடுப்பு மற்றும் நீதி தொடர்பான விடயத்தை ஆராயும் விசேட பிரதிநிதிகள் வந்திருந்தனர்.
2. அதன் பின்னர் வலிந்து காணாமல் போகச் செய்தல் தொடர்பாக ஆராயும் குழுவும் வந்திருந்தது.
3. சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதி இலங்கை வருகை தந்து சிறுபான்மை மக்கள் குறித்தும் அவர்களது உரிமைகள் குறித்தும் ஆராய்கின்றார்.
4. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் குசெயின் (Zaaidal Husain) அவர்கள் இவ்வருடத்தில் இரண்டு தடவைகள் வருகை தந்ததுடன் இலங்கையில் இப்பொறிமுறைகள் மக்களது கருத்துக்களுக்கு அமைவாக உருவாக்கப்படுவதை உறுதிப்படுத்தி ஐ.நாவின் உண்மை, நீதி, மீள்நடக்காமையை உறுதிப்படுத்தல், இழப்பீடு ஆகியவை சார்பான விசேட நிபுணரான பப்லோ டி கிறீவ் அவர்களை மேற்பார்வை செய்வதற்கு நியமித்துள்ளார்.

### நல்லிணக்கப் பொறிமுறை மற்றும் கலந்தாலோசனைச் செயலணி

ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையினது அழுத்தம் காரணமாக இலங்கையானது இடைக்கால நீதி தொடர்பான மக்களது கருத்துக்களை அறியும் செயலணியையும் (CTF) நிறுவியது. அக்குழுவிலே 10 பேர்களினை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்ததோடு, பதினொரு சிவில் அமைப்புக்களைச் சேர்ந்த புத்திஜீவிகளையும் பிரதமர் நியமித்தார். இக்கலந்தாலோசனைச் செயலணியானது, பின்வருவோரை உள்ளடக்குகின்றது.

நல்லிணக்கப் பொறிமுறைகள் கலந்தாலோசனைச் செயலணி அங்கத்தவர்கள்

1. மனோரி முத்தெட்டுவேகம - தலைவி
2. கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து - செயலாளர்
3. காமினி விஜன்கொட
4. விசாகா தர்மதாச
5. சாந்தா அபிமானசிங்கம்
6. போரசிரியை சித்ரலேகா மௌனகுரு
7. கே.வி ஜனரஞ்சன
8. பேராசிரியர் தயா சோமசுந்தரம்
9. கலாநிதி பர்ஷானா ஹனிபா
10. பேராசிரியை கமீலா சமரசிங்க
11. மிராக் ரஹீம்
12. கே.டபிள்யு. ஜனரஞ்சன



அத்துடன் நல்லிணக்கப் பொறிமுறைகளை இணைக்கும் செயலகம் ஒன்றையும் (www.scrm.gov.lk) இடைக்கால நீதி தொடர்பான மக்களது கருத்துக்களை அறியும் செயலணியும் ஸ்தாபிக்கப்பட்டது. யுத்தம் உக்கிரகமாக நடந்த வடகிழக்கு மாவட்டங்கள் 8 இற்கும் ஆறு பேரைக் கொண்ட 8 செயலணிகளையும் ஏனைய ஏழு மாகாணங்களில் 7 வலயச் செயலணிகளும் உருவாக்கப்பட்டது. இதிலே மொத்தமாக 100 தொண்டர்கள் வரையில் பணிாற்றியதுடன் அரைவாசிப் பேர்கள் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. பக்கச்சார்பும் இன்றி, பொதுமக்களின் கருத்தைப் பதிவு செய்வது இவர்களது பணியாக இருந்ததுடன், இலங்கை முழுவதுமாகவுள்ள மக்களின் முழுமையான கருத்துக்களைப் பிரதிபலிக்கும் வகையில் இவர்களது கலந்தாலோசனையானது பொதுக் கூட்டங்களாகவும், தேவை ஏற்படின் தனிநபர் கருத்தறிதலாகவும் அமைந்தது.

இச்செயலணியானது நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகப் பரிந்துரைக்கப்பட்ட பின்வரும் 4 பொறிமுறைகள் குறித்து பொதுமக்களிடமிருந்து ஆலோசனைகளைக் கோருகிறது.

1) விசேட வழக்குத் தொடுப்பவரை உள்ளடக்கிய நீதிப்பொறிமுறை.

2) உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் மீள்நிகழாமை தொடர்பான ஆணைக்குழு.

3) காணாமல் போனோர் தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்கான அலுவலகம்.

4) இழப்பீடுகளுக்கான அலுவலகம்

இந்தக் கலந்தாலோசனைச் செயல்முறையின் ஊடாகத் தனிநபராகவோ, குழுவாகவோ எவரேனும் முகம் கொடுக்கும் ஏதாவது பிரச்சினை தொடர்பில் இந்தக் கலந்தாலோசனைச் செயல்முறை நேரடியான நடவடிக்கைகளை எடுக்காது. உதாரணமாக, விசாரணை செய்வதற்கோ, இழப்பீட்டை வழங்குவதற்கோ அல்லது, நீதியளிப்பதற்கோ இதற்கு அதிகாரம் இல்லை. ஏற்கனவே அறிந்திருக்கும், அல்லது நீங்கள் கலந்து கொண்ட ஆணைக்குழு மாதிரி அல்லாது இதனது கலந்தாலோசனைச் செயல்முறையானது அமையாது. உங்கள் குறைகளையும் கடந்த கால நிகழ்வுகளையும் அவற்றுக்காக நீங்கள் பெற்றுக் கொள்ள விரும்புவது தொடர்பிலும் உங்கள் கருத்துக்களை இந்தச் செயல்முறை பதிவு செய்யும். அதனூடாக நீதி, உண்மை, நல்லிணக்கத்தை வெளிக்கொண்டு வரும் கட்டமைப்புக்களையும் செயல்முறைகளையும் அரசு வடிவமைக்க முடியும். உதாரணமாக உங்கள் கருத்துக்களினூடாக எப்படி விசாரணை நடத்தப்பட வேண்டும், யாரால் நடத்தப்பட வேண்டும், வெவ்வேறுபட்ட வகையிலானதான வன்முறைகளுக்கு எவ்வாறான இழப்பீடு வழங்கப்பட வேண்டும், நீதியையும் எதிர்கால சமாதானத்தையும் உறுதிப்படுத்தத் தேவையான சீர்திருத்தங்கள் (நிறுவன ரீதியாக அல்லது சட்ட ரீதியாக) எவை என்பன பற்றி உங்கள் சமர்ப்பித்தல் ஆலோசனைகள் அமைய முடியும்.

## 1. விசேட வழக்குத் தொடுப்பவரை உள்ளடக்கிய நீதிப் பொறிமுறை

இலங்கையில் இறுதிக்கட்டப் போரில் பாரியளவு சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இக்குற்றத்தை ஆதாரப்படுத்தும் முகமாகப் பலவாறான ஆதாரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. உதாரணமாக சனல் 4 தொலைக்காட்சியைக் கூறலாம். இக்குற்றச் சாட்டுக்கள் பாரியளவில் இலங்கையின் இராணுவத்தையும் புலிகளையும் சுட்டி நிற்கின்றது. எந்தவொரு நிலைமாற்றுக் கால நீதிக்குப் பொறுப்புக் கூறுதல் தண்டனை வழங்குதல் என்பன மிக முக்கியமான அடிப்படையாகும். ஏனெனில் குற்றம் செய்பவர்களைக் கண்டிப்பதும் குற்றங்கள் மீள் நடக்காது இருப்பதற்காக அவர்களைத் தண்டிப்பது, தடுத்து நிறுத்துவது மற்றும் எதிர்காலத்தில் அவ்வகையான குற்றங்கள்

இடம்பெறாது என்பதனை உறுதிப்படுத்துவதும் வெற்றிகரமான வழக்குத்தொடுப்புக்களின் ஊடாக உறுதிப்படுத்தப்படுவதுடன், தற்போது இருக்கின்ற அரசானது கடந்தகால குற்றச் செயல்களில் இருந்து விடுபடுவதற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி, மீள்நடக்காமைக்கான உத்தரவாதம் வழங்குவதற்கும் விசேட நீதிமன்றப் பெறிமுறை உத்தரவாதமளிக்கும்.

இவ்விசேட நீதிமன்றப் பொறிமுறையானது, சர்வதேச நீதிபதிகளையும், சட்ட வல்லுனர்களையம் உள்ளடக்க வேண்டும் என்பது ஐ.நா மனித உரிமைச் சபையின் கோரிக்கையாகும். ஆயினும் இதற்கு இலங்கை அரசு பொதுநலவாய நாடுகளில் இருந்து மாத்திரம் நீதிபதிகளையும் சட்ட வல்லுனர்களையும் உள்ளடக்குவதாக 2015 புரட்டாதியில் வெளியாகிய தீர்மானத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தற்போது இப்பொறிமுறை நிலைமாற்றுக்கால நீதியின் கடைசிப் பொறிமுறையாகப் பின்தள்ளப்பட்டதுடன் நாட்டின் இவ்வரசின் ஜனாதிபதி, பிரதமர், வெளி விவகார அமைச்சர் என்போர்கள் முன்னிற்குப் பின் முரண்பாடான கருத்துக்களைக் கூறி வருகின்றனர்.

## 2. உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் மீள்நிகழாமை தொடர்பான ஆணைக்குழு.

கடந்த காலத்தில் இடம்பெற்ற அத்துமீறல்கள், துஷ்பிரயோகங்கள், அவற்றிற்கான காரணங்கள் அவற்றின் விளைவுகள் என்பன பற்றியும், எந்தளவிற்கு அவை இடம்பெற்றன, அவற்றின் தன்மைகள் தொடர்பாக விளங்கிக் கொண்டு விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் அமைப்புக்கள் இவையாகும். இவை பாதிக்கப்பட்டோரின் கருத்துகள் மற்றும் கதைகளையும் உள்ளடக்கியிருக்கும். அத்துடன் இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாது தடுப்பதை நோக்கமாகவும் கொண்டிருக்கும். இது உத்தியோக பூர்வமானவை என்பது குறிப்பிடத்தக்கது. இவை கொள்கைகளைத் தயாரிக்கவும், வழக்குத் தொடர்பான சிபாரிசுகளைச் செய்வதற்கும் அதிகாரம் கொண்டவையாகும்.

## 3. காணாமல் போனோர் தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்கான அலுவலகம்.

இலங்கை யுத்த வரலாற்றில் காணாமல் போதல் என்பது மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஒரு கறை படிந்த வரலாறாக சர்வதேசத்தால் அவதானிக்கப்பட்டுள்ளது. ஐ.நாவின் வரிசைப்படுத்தலில் ஒருவரைக் காணமல் செய்தல் மற்றும் வலிந்து காணாமல் செய்தலில் இலங்கை அரசானது இரண்டாம் இடத்தில் உள்ளது. தற்போதுள்ள அரசாங்கம் இவ்வருடம் வைகாசி மாதம் ஐ.நாவின் வலிந்து காணாமல் போதலைத் தடுக்கும் சாசனத்தில் கைசாத்திட்டதுடன் இலங்கையின்





நிலைமாற்றத்திற்கான நீதிப் பொறிமுறையின் முதற் பொறிமுறையாகக் காணாமல் போனோர் ஆட்கள் பற்றிய அலுவலகத்தை ஸ்தாபிப்பதை (2016 ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் பாராளுமன்றில் சட்டமாக்கப்பட்டது) பாராளுமன்றில் சட்டமூலமாக்கியுள்ளது.

1. காணாமற் போன ஆட்களைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கு உரிய வழிமுறைகளை ஏற்பாடு செய்வதற்கும், அவ்வாட்கள் எச்சந்தர்ப்பத்தில் காணாமற் போனார்கள் தற்போது அவர்களது நிலையையும் தெளிவுபடுத்தல்.

2. இச்சட்டத்திற்கமைய காணாமற் போன ஆட்கள் பற்றிய சம்பவங்களைக் குறைக்கும் முகமாக உரிய அதிகாரிகளுக்கு விதப்புரைகளைச் செய்வதற்கும்

3. இச்சட்டம் கூறுவதுபோல காணாமல் போன ஆட்களினதும் அவர்களது உறவினர்களதும் உரிமைகளையும் அக்கறைகளையும் பாதுகாப்பதற்கும்

4. காணாமற்போன ஆட்கள், அவர்களது உறவினர்கள் எவ்விதமான நிவர்த்திக்கான வழிமுறைகளை நாடுகின்றார்களோ அவ்வழிமுறைகளை நிவர்த்திக்காக அடையாளம் காணுதல்

இவ்வலுவலகமானது, கொழும்பில் அமைந்திருத்தல் வேண்டும். அதனது அவசியத்தன்மைக்கு ஏற்றவாறான எண்ணிக்கையிலான பிராந்திய அலுவலகங்கள் அமைக்கப்படலாம். அரசியலமைப்பின் விதப்புரையின் பேரில் ஏழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர். இதன் தவிசாளர் இதன் பிரதான நிறைவேற்று அலுவலகராக இருப்பார்.

காணாமற்போனோர் தொடர்பாக ஏற்கனவே அரச, வேறு நிறுவனங்கள் மற்றும் விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் மூலம் திரட்டப்பட்ட தகவல்களை ஒன்று திரட்டுதல் எனப் பாதிக்கப்பட்டோர் தரப்பினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையானது இதிலே இடம்பெற்றுள்ளது. இருப்பினும், குற்றம் செய்பவர்களை விசாரிக்கும் அதிகாரம் என்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை இதிலே உள்ள குறைபாடாகும்.

## 4. இழப்பீடுகள்

தனிப்பட்டோர் அல்லது சமூகத்தின் உரிமைகள் கடுமையான வகையில் பாதிப்படைந்து அல்லது மனித உரிமைகள் மீறப்படால் அல்லது அத்து மீறப்பட்டால் ஏற்பட்ட உரிமை மறுப்புக்களைத் திருத்தியமைப்பதே இழப்பீடு ஆகும். அவ்வாறு பாதிப்புக்குள்ளாகியோரைப் "பாதிக்கப்பட்டவர்கள்" என உத்தியோகபூர்வமாக அங்கீகரித்து அவர்களது அத்துமீறப்பட்ட உரிமைகளுக்கு மற்றும் ஏற்பட்ட துயரங்களுக்கு ஆவண செய்தலாகும். பின்வருவன இழப்பீடு வழங்கும் நிகழ்ச்சிகளாகக் கொள்ளப்படுகின்றன.

1. மீட்டளிப்பு, நட்டஈடு, மீள்கட்டுமானம்
2. அரசு மீது நம்பிக்கை கொள்ளும் வகையில் மனித உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கக் கூடிய திறனை வளர்த்தல்
3. நிலையான சமாதானத்திற்கு வழிவகுத்தல்

மேலே குறிப்பிடப்பட்ட கலந்தாலோசனைச் செயலணியானது, இவற்றுடன் நீதியையும், உண்மையையும், நல்லிணக்கத்தையும் கொண்டுவருவதற்கு வேறு பொறிமுறைகள், செயல்முறைகள், வழிவகைகள் உள்ளனவா என்பது தொடர்பிலும் பொது மக்களிடமிருந்து கருத்துக்களைக் கேட்டு அறிந்துள்ளது. இவ்வறிக்கை இவ்வருடம் ஐப்பசி மாதம் கையளிக்கப்படவுள்ளது.

இந்தப் பொறிமுறைகளின் நோக்கம் உண்மையை நிலைநிறுத்தி இலங்கையில் ஏற்பட்ட முரண்பாடுகளால் உருவான வன்முறை, தீங்கு ஆகியவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்து சமாதான சகவாழ்வை ஏற்படுத்துவதாகும்.


உசாத்துணை நூல்கள்

1. இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகை 2016 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்கச் சட்டம்
2. நிலைமாற்றத்திற்கான நீதி, தேசிய சமாதானப் பேரவை
3. நிலைமாற்றுக்கால நீதிக் கைநூல், சட்டக் கல்விக்கான தெற்காசிய மையவகம்
4. ஐக்கிய நாடுகள் விசாரணை அறிக்கை: விளக்கங்களும் குறிப்புகளும்
5. www.scrm.gov.lk


# நிகழ்வுகளின் கால

**மே 2009:** யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் இலங்கைக்கு விஜயம் செய்தார். இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில் வகைப்பொறுப்பிற்கான முக்கியத்துவத்தினை ஐநா செயலாளர் நாயகம் வலியுறுத்தியிருந்தார்.

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கு மனித உரிமைக் கவுன்சில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென 2009, மே மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்சிலின் 11வது விசேட அமர்வின் போது பதினேழு நாடுகள் வலியுறுத்தின. சீனா, ரஷ்யா, இந்தியா மற்றும் வளர்முக நாடுகள் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கிய உதவியினைக் கொண்டு இந்த முயற்சி மழுங்கடிக்கப்பட்டது. மாறாக இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் பாராட்டியும் தமிழ்ப் புலிகளைக் கண்டித்தும் அரச படைகளினால் மனித உரிமைகள் மற்றும் மனிதநேயச் சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுக்களினைப் புறக்கணித்தும் மே 2009ல் மனித உரிமைக் கவுன்சில் S-11/1 பிரகடனத்தினை வெளியிட்டது. இந்தப் பிரகடனமானது 6 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளாத நிலையில் 29 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

**25 ஆகஸ்ட் 2009:** ஐக்கிய இராச்சியத்தின் சனல் 4 தொலைக்காட்சியில் இராணுவத்தினரால் எல்ரீரீஈ உறுப்பினர்கள் கண்கள் கட்டப்பட்ட நிலையில் சுட்டுக் கொல்லப்படும் வீடியோ காட்சிகள் ஒளிபரப்பப்பட்டன. வெளியிடப்பட இருந்த பல வீடியோக் காட்சிகளில் முதலாவதாக இது ஒளிபரப்பப்பட்டதுடன் பின்னாட்களில் இக்காட்சிகள் டொக்குமெண்டரிப் படமாகத் தயாரிக்கப்பட்டன.

**22 ஒக்டோபர்:** ஐரோப்பியச் சங்கத்தின் கிரீன் கட்சியினால் (ஜேர்மனிய கிரீன் கட்சியின் அழுத்தத்தினால்) இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஐரோப்பியச் சங்கப் பாராளுமன்றத்தில் ஒரு பிரகடனம் முன்மொழியப்பட்டது. 2009 ஜனவரி மற்றும் மே மாதங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சர்வதேசச் சட்டங்கள் மீறப்பட்ட 300 வன்முறைச் சம்பவங்களை ஆவணப்படுத்தி அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் அமெரிக்க காங்கிரசிற்கு அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்தது.

**25 ஒக்டோபர் 2009:** யுத்தத்தின் கடைசிச் சில மாதங்களின் போது நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்கள் பற்றிய சுயாதீனமான சர்வதேச விசாரணைக்கு மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையாளர் கோரிக்கை விடுத்தார்.

**07 ஜனவரி 2010:** சனல் 4 வீடியோக் காட்சிகளை இலங்கை அரசாங்கம் பொய்யென மறுத்தபோதும் அவை உண்மையானவை போல் தோன்றுவதாக நீதி விசாரணையின்றி மரண தண்டனை வழங்கப்படல் அல்லது தன்னிச்சையாக மரண தண்டனை வழங்கப்படல் தொடர்பான ஐநா விசேட தூதுவர் பிலிப் அல்ஸ்டன் குறிப்பிட்டிருந்தார்.

# ஒழுங்கு - இலங்கையில் இடைமாற்ற நீதி

**ஜூன் 2010:** சிவில் யுத்தத்தின் கடைசிக் கட்டங்களில் போர்க்குற்றங்கள் நிகழ்த்தப்பட்டதா என்பது தொடர்பாகத் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக இலங்கையில் வகைப்பொறுப்புத் தொடர்பான மூன்று பேர் கொண்ட நிபுணர் குழுவினை செயலாளர் நாயகம் நியமித்தார். குழுவிலே மர்சுகி டருஸ்மன் (இந்தோனேசியா-தலைவர்), ஸ்டீவன் ரட்னெர் (அமெரிக்கா) மற்றும் யஸ்மின் சுகா (தென்னாபிரிக்கா) ஆகியோர் அடங்கியிருந்தனர்.

**11 ஆகஸ்ட் 2010:** அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் 2009ல் சமர்ப்பித்த அறிக்கையின் தொடர்ச்சியாக அமெரிக்க காங்கிரசிற்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்தது. எல்எல்ஆர்சியின் சுயாதீனத்தினைப் பற்றிக் கேள்வியெழுப்பிய ராஜாங்கத் திணைக்கள அறிக்கை புதிதாக நியமிக்கப்பட்ட ஐநா நிபுணர்கள் குழுவுடன் சேர்ந்து பணியாற்றுமாறு இலங்கை அரசாங்கத்தினை ஊக்கப்படுத்தியது.

A/HRC/S-11/L.1/Rev.2 பிரகடனத்தினை மனித உரிமைகள் ஆணைக்குழு மீளப் பரிசீலிக்க வேண்டுமென 2011 ஏப்ரலில் வெளியிடப்பட்ட ஐநா நிபுணர்கள் குழு அறிக்கை பரிந்துரைத்தது. இலங்கையில் சிவில் யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பினரும் சிவிலியன்களுக்கு அட்டூழியங்களைப் புரிந்துள்ளனரென்று குறிப்பிட்ட அறிக்கை போர்க்குற்றங்களை விசாரிக்க சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடுத்தது.

**14 செப்டெம்பர் 2011:** இலங்கையிடம் நம்பத்தகுந்த செயன்முறை இல்லை என்றும் மாற்றுப் பொறிமுறை ஒன்றிற்கான அழுத்தம் வழங்கப்படல் வேண்டும் என்றும் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி ராஜாங்கச் செயலாளர் றொபேட் பிளேக் தெரிவித்தார்.

2012 மார்ச் 19ல் நடைபெற்ற வழமையான அமர்வின்போது இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் வகைப்பொறுப்பினை மேம்படுத்துவதற்குச் சாதகமாக 24 வாக்குகள் (இந்தியா மற்றும் அமெரிக்கா உள்ளடங்கலாக) அளிக்கப்பட்டும் எதிராக 15 வாக்குகள் அளிக்கப்பட்டும் 8 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளாத நிலையிலும் மனித உரிமைக் கவுன்சில் 19/2 பிரகடனத்தினை எடுத்தது. கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு பிரகடனம் இலங்கையிடம் கோரிக்கை விடுத்ததுடன் அடுத்த வருடம் இற்றைப்படுத்தலை வழங்குமாறு CR இடம் கேட்டுக்கொண்டது.

**பெப்ரவரி 2013:** கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் கடப்பாடுகள் தொடர்பில் இங்கை அரசாங்கத்தின் முன்னேற்றம் பற்றிய கண்டனத்துடன் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் அறிக்கை ஒன்றினை வெளியிட்டதுடன் சட்டத்தின் பிடியிலிருந்து பாதுகாப்புப் பெறுவதனை எதிர்ப்பதற்கு ஆக்கபூர்வமான பரிந்துரைகளும் அறிக்கையில் வெளியிடப்பட்டன. 19/2 பிரகடனத்திற்கு இலங்கை அரசாங்கம் இயைபுறத் தவறிய காரணத்தினால் சாதகமாக 25 வாக்குகளுடனும் எதிராக 13 வாக்குகளுடனும் 8 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமலும் 2013 மார்ச் மாதத்தில் நடைபெற்ற 22வது மனித உரிமைக் கவுன்சில் கிரமமான அமர்வின் போது பிரகடனம் 22/1 நிறைவேற்றப்பட்டது. கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுமாறும் குற்றச்சாட்டுகளுக்கெதிராக சுயாதீனமானதும் நம்பகத்தன்மை மிக்கதுமான விசாரணையினை நடத்துமாறும் இலங்கை அரசாங்கத்திடம் பிரகடனம் கோரிக்கை விடுத்ததுடன் அடுத்த வருடம் இற்றைப்படுத்தலை வழங்குமாறு OHCHRடம் வேண்டுகோள் விடுத்தது.

**ஆகஸ்ட் 2013:** இலங்கைக்கு ஒரு வார காலம் விஜயம் செய்த ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் நவி பிள்ளை, சீரழிந்து போகும் சனநாயகம் தொடர்பாகவும் சீரழிந்து போகும் சட்ட ஆட்சி தொடர்பாகவும் அரசாங்கத்தினைக் குற்றம் சாட்டினார். 2013 செப்டெம்பர் 25ம் திகதி ஐநாவில் வாய்மூல இற்றைப்படுத்தலை வழங்கிய ஆணையாளர் இலங்கையின் குறைகளைச் சுட்டிக்காட்டியதுடன் புலப்படக்கூடிய பெறுபேறுகளுடன் நம்பத்தகுந்த தேசிய வகைப்பொறுப்புச் செயன்முறையினைக் காட்டுவதற்கு 2014 மார்ச்சிற்கு முன்னர் உள்ள நேரத்தினைப் பயன்படுத்துமாறும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார். இதனை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் சர்வதேச சமூகம் அதன் சொந்த விசாரணையினை நிலைநாட்டுவதற்குரிய கடமையினைக் கொண்டிருக்கும் எனவும் அவர் கூறினார்.

**செப்டெம்பர் 2013:** தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி ராஜாங்கச் செயலாளர் றொபேட் பிளேக்கினைப் பதிலீடு செய்த நிசா பிஸ்வால், இலங்கை அதன் சொந்த உள்நிலைச் செயன்முறை மூலம் வகைப்பொறுப்பினைத் தீர்க்காவிட்டால் சர்வதேச விசாரணைக்கான அழைப்பு அதிகரிக்கும் எனக் குறிப்பிட்டார். வகைப்பொறுப்புத் தொடர்பாக இலங்கை நடவடிக்கை எடுக்கத் தவறினால் சர்வதேசத்தின் பொறுமை எல்லை மீறும் என அவர் தெரிவித்தார்.

**நவம்பர் 2013:** இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய அரசாங்கங்களின் தலைவர்களின் மாநாட்டில் பங்குபற்றுவதில்லையென கனடா, இந்தியா மற்றும் மொரிசியஸ் ஆகிய நாடுகள் தீர்மானித்தன. இங்கிலாந்துப் பிரதமர் டேவிட் கமரூன் மாநாட்டில் பங்குபற்றிய போதிலும் அவர் தனது விஜயத்தினை வகைப்பொறுப்புக்கான அழுத்தத்தினைப் பிரயோகிப்பதற்குப் பயன்படுத்தினார். 2014 மார்ச்சில் நடைபெறவுள்ள மனித உரிமைக் கவுன்சில் கூட்டத்திற்கு முன்னர் இலங்கை போர்க்குற்ற விசாரணையினை நடத்தாவிட்டால் சுயாதீனமான சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளுக்கு இங்கிலாந்து அழுத்தம் கொடுக்கும் என கமரூன் தெரிவித்தார்.

**02 பெப்ரவரி 2014:** இலங்கையின் முன்னேற்றமின்மையானது அமெரிக்காவிலும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் பெரும் விரக்தியினையும் சந்தேகத்தினையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் இதனால் பொறுமை இழப்பு ஏற்பட்டு வருவதாகவும் இலங்கைக்கான தனது இரண்டு நாள் விஜயத்தின் பின்னர் அமெரிக்க உதவி ராஜாங்கச் செயலாளர் பிஸ்வால் குறிப்பிட்டார்.

**24 பெப்ரவரி 2014:** "உண்மையினை நிலைநாட்டி நீதியினைப் பெற்றுக்கொள்வதற்குத் தேசியப் பொறிமுறையானது தொடர்ச்சியாகத் தவறியுள்ள காரணத்தினால்" சர்வதேச விசாரணைப் பொறிமுறையினை மனித உரிமைக் கவுன்சில் உருவாக்கவேண்டும் எனப் பரிந்துரைத்து ஐநா உயர் ஸ்தானிகர் நவி பிள்ளை அறிக்கையொன்றினை வெளியிட்டார்.

**மார்ச் 2014:** 2002 - 2009 காலப்பகுதியில் நிகழ்த்தியதாகக் குற்றம் சாட்டப்படும் போர்க்குற்றச் செயல்களை விசாரிப்பதற்கு சர்வதேச விசாரணைக்கு அதிகாரமளிக்கும் 25/1 பிரகடனம் 25வது மனித உரிமைக் கவுன்சில் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. 23க்கு 12 வாக்குகளால் பிரகடனம் நிறைவேற்ப்பட்டது. 12 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. முன்னைய இரண்டு தீர்மானங்களிற்கும் சார்பாக வாக்களித்த இந்தியா வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. இந்த ஆணைக்கு ஏற்ப, இலங்கை மீது ஜெனீவாவினைத் தளமாகக் கொண்ட OHCHR விசாரணையினை மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் நிறுவினார். ராஜபக்ஷ அரசாங்கத்தின் கண்காணிப்பினைத் தாண்டி சில சிவில் சமூக ஆதரவாளர்கள் இலங்கையினுள் உள்ள யுத்தத்திலிருந்து தப்பிப்பிழைத்தோரின் சாட்சிகளைச் சமர்ப்பித்திருக்கின்றனர்.

**ஜூன் 2014:** ஆதரவும் ஆலோசனையும் வழங்கும் வகிபாத்திரத்தினை வகிக்கவும் விசாரணை முழுவதினூடும் சுயாதீனமான பரிசீலனையினை மேற்கொள்ளவும் கீர்த்தி வாய்ந்தவர்களான பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி திரு. மார்டி அஹ்டிசாரி, நியூசிலாந்து முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி Ms. சில்வியா காட்ரைட், பாகிஸ்தான் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் Ms. அஸ்மா ஜஹாங்கீர் ஆகியோரை ஐநா உயர் ஸ்தானிகர் நியமித்தார்.

**ஜனவரி 2015:** ராஜபக்சவின் தோல்வியில் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும் சிறிசேன அரசாங்கத்தினை வரவேற்ற அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் சனநாயக ஆட்சி, மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றினை நோக்கி அரசாங்கத்துடன் சேர்ந்து பணியாற்ற வாக்குறுதி வழங்கியது. வகைப்பொறுப்பிற்கான செயற்பாட்டிற்கு இலங்கை அரசாங்கம் வாக்குறுதி வழங்கியதும் செப்டெம்பர் மாதம் வரையில் OISL அறிக்கையின் வெளியீட்டினைப் பிற்போட ஐநா உயர்ஸ்தானிகர் செய்ட்ராட் ஹீசைன் தீர்மானித்தார். புதிய அரசாங்கம் அதன் ஒத்துழைப்பினைக் காட்டுவதற்கு அவகாசம் வழங்குவதற்காக ராஜாங்கத் திணைக்களம் பிற்போடலுக்கு ஆதரவு வழங்கியது.

**30 மார்ச் முதல் 3 ஏப்ரில் 2015 வரை:** இடைமாற்ற நீதி தொடர்பான ஐநா விசேட தூதுவர் பப்லோ டீ கிரெய்ப் இலங்கைக்கு விஜயம் செய்தார். கடந்த கால ஆணைக்குழுக்களின் நம்பிக்கை இடைவெளியினை அவதானித்த அவர் கடந்த காலத்தில் நடந்தவை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு ஆரம்பிப்பதற்காக இலங்கைக்கு பல பரிந்துரைகளை வழங்கினார்.

**செப்டெம்பர் 2015:** OISL அறிக்கையினை ஐநா வெளியிட்டது. ஐநா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கருத்தொருமிப்பு மிக்க தீர்மானத்திற்கும் இடைமாற்ற நீதிச் செயன்முறைக்கும் இலங்கை அரசாங்கம் இணங்கியது. குறிப்பாகக் கலப்பு நீதிமன்றம் உள்ளடங்கலாகப் பல ஏற்பாடுகள் இலங்கைச் செயற்பாட்டாளர்களின் சிறு குழுவினால் நுட்பமாகக் கலந்துரையாடப்பட வேண்டியிருந்தன. உள்நாட்டு வகைப்பொறுப்புச் செயன்முறை பற்றிய இலங்கை அரசாங்கத்தின் பரிந்துரைகளுக்கு ஆரம்பத்தில் அமெரிக்கத் தூதுக்குழுவினர் இணங்குவதற்கு ஆர்வமாக இருந்தனர். 2017 மார்ச் மாதத்திலே மனித உரிமைக் கவுன்சிலுக்கு OHCHR இற்றைப்படுத்தலை வழங்கவேண்டுமெனப் பிரகடனம் தேவைப்படுத்துகின்றது.

**நவம்பர் 2015:** வலிந்து மேற்கொள்ளப்பட்ட மற்றும் தன்னிச்சையின்றிய காணமற்போதல்கள் பற்றிய ஐநா செயற்குழு இலங்கைக்கு விஜயம் செய்தது. 2016 ஜீலையில் குழு மனித உரிமைக் கவுன்சிலுக்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்தது.

**பெப்ரவரி 2016:** மனித உரிமைகளுக்கான ஐநா ஆணையாளர் செய்ட் இலங்கைக்கு விஜயம் செய்தார். இடைமாற்ற நீதிப் பொறிமுறைகளை அமுல்படுத்துவது தொடர்பில் அவர் அரசாங்கத்தின் முன்னேற்றத்தினையும் குறைகளையும் அவதானித்து தொடர்ச்சியான உதவிக்கான வாக்குறுதியினை வழங்கினார்.

**மே 2016:** நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுயாதீனம், சித்திரவதை, குரூரமாகவும் மனிதாபிமானமற்ற முறையிலும் நடத்துதல் அல்லது அவமானப்படுத்தும் விதத்தில் நடத்துதல் மற்றும் தண்டித்தல் தொடர்பான ஐநா விசேட தூதுவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

**செப்டெம்பர் 2016:** ஐநா செயலாளர் நாயகம் இலங்கைக்கு மீண்டும் விஜயம் செய்தார்.

சிறுபான்மையினரின் விடயங்கள் தொடர்பான ஐநா விசேட தூதுவர் Ms. ரீட்டா இசாக் ஒக்டோபர் 10 முதல் 20 வரையில் இலங்கைக்கு வருகை தந்து பல இடங்களுக்கும் விஜயம் செய்து பல்வேறுபட்ட பங்கீடுபாட்டாளர்களையும் சந்தித்தார். தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் சிறுபான்மையினரின் குறைகளைத் தீர்க்கத் தவறியமை பற்றிக் குறிப்பிட்ட அவர் தற்போது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதற்கும் சகவாழ்வினை மேம்படுத்துவதற்கும் தேசிய கூட்டு அரசாங்கம் முயற்சிக்கவேண்டுமெனவும் குறிப்பிட்டார்.



Implimenting by ESDF
ஆக்கடம் - ஷிரீன் ஷரூர் | பக்கங்கள் வடிவமைப்பு - வேலாயுதன் ஜெயசித்ரா | படங்கள் - இணையத் தளம்